# பத்திரிக்கை செய்தி

**அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், விருதுநகரில் காலியாக உள்ள பணிமனை உதவியாளர் பணியிடத்தை நிரப்பிட தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகிறது.**

இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் ஒரு பணிமனை உதவியாளர் நிரந்தரபணியிடத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பம் செய்வதற்கு கல்வித்தகுதியாக 8ம் வகுப்பு தேர்ச்சியுடன் தொழிற் கல்வி தகுதியாக NTC/NAC அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முன் அனுபவம் ஏதேனும் இருப்பின் தகுதிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான ஊதிய விகிதம் ரூ. 5200 -20200 + 1900 தரஊதியம் ஆகும்.

இதற்கான வயது வரம்பு 01.07.2016 அன்று **தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ( அருந்ததியினர் )** 18 வயது முதல் 35 வயதுக்குள் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். காலியாக உள்ள ஒரு பணிமனை உதவியாளர் பணியிடத்திற்கு தச்சர் தொழிற் பிரிவு பயின்ற ( தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரிவில் (**அருந்ததியினர்) (முன்னுரிமை உள்ளோர் ) SC (A ) GL – priority** என்ற இனஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படவுள்ளது.

மேற்கண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தங்களது பெயர், கல்வித்தகுதி, தொழிற்நுட்ப கல்வித்தகுதி, ஜாதி, முன்அனுபவம், நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் படிவமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களின் நகல்களுடன் இணைத்து (Xerox Copy) 06.10.2016 அன்று மாலை 5.00 மணிக்குள் முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், சூலக்கரை மேடு, விருதுநகர் 626 003 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். மேலும் விபரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண் : 04562- 252382 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என முதல்வர் திரு.மு.செந்தில்வேலன் தெரிவித்துள்ளார்.

முதல்வர்.